RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2243

# தமிழ் அற இலக்கியங்களில் கல்வியியல் சிந்தனைகள்

ஷா. முஹம்மது அஸ்ரின் [அ,*], த. செல்வராசு [அ]

[அ] தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவுப் பெற்றது, திருச்சிராப்பள்ளி-620020, தமிழ்நாடு, இந்தியா.

# Educational Ideas in Moral Tamil Literature

S. Mohamed Azrin [a,*], T. Selvaraju [a]

[a] Department of Tamil, Jamal Mohamed College (Autonomous), Affiliated to Bharathidasan University, Tiruchirappalli-620020, Tamil Nadu, India.

*Corresponding author Email: smdazrin1998@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2243

Received: 03-09-2022; Revised: 22-10-2022; Accepted: 03-11-2022; Published: 11-11-2022

**Abstract:** In the Pathinenkilkanakku collection of books that arose in order to uphold righteousness, and in the moral books that followed them, the poets have expounded educational thoughts with interesting songs. Our forefathers have sung songs in Tamil texts even before western scholars have spoken about the importance of education. The kings of the Sangam age ruled the country with the help of learned men. An uneducated person, even if he had acquired a great deal of wealth, was treated with contempt. The authors of the moral books, who know the importance of education, have not only mentioned righteousness in their books but have also praised education in many songs. Thus, the songs of the poets of the moral book become the subject of study under the categories of merits of education, method of obtaining education, method of education, mode of expressing education, and the status of the unlearned.

**Keywords:** Sangam age, Moral Books, Pathinenkilkanakku, Education.

## முன்னுரை

“கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி” என்பது தமிழ்மகளான ஔவையின் கூற்று. அறத்தை நிலைநிறுத்த வேண்டி எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலும், அவற்றைப் பின்தொடர்ந்து தோன்றிய நீதி நூல்களிலும் கல்வியியல் சிந்தனைகளைப் புலவர்கள் சுவைமிக்க பாடல்களால் எடுத்தியம்பியுள்ளனர் (Karthikesu Swamikal, 1996). கல்வியின் சிறப்பை மேலை நாட்டறிஞர்கள் கூறும் முன்பே தமிழ் நூல்களில் நம் முன்னோர்கள் பாடல்களாகப் பாடியுள்ளனர். அவ்வாறு கல்வியின் சிறப்பு, கல்வி பெறும் முறை, கல்வி கற்கும் முறை, கல்வியை வெளிப்படுத்தும் முறை மற்றும் கல்லாதவனின் நிலை ஆகிய பகுப்புகளின்கீழ் நீதிநூல் புலவர்களின் பாடல்கள் ஆய்வுப் பொருளாகின்றன.

## அற நூல்கள்

சங்க காலத்தில் தோன்றிய எட்டுத்தொகை நூல்களையும் பத்துப்பாட்டு நூல்களையும் “பதினெண்மேற்கணக்கு நூல்கள்” என்றும், “சங்க இலக்கியங்கள்” என்றும் அழைத்தனர். இவற்றில் அறக் கருத்துகளைக் காட்டிலும் காதலையும் வீரத்தையும் குறித்த செய்திகளே மிகுதியாக இடம்பெற்றிருந்தன. இதன் பின்னர் தோன்றிய 18 நூல்களைப் “பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்” என வழங்கினர். இவற்றுள் 11 நூல்கள் அறம் சார்ந்தும், ஆறு நூல்கள் அகம் சார்ந்தும், ஒரு நூல் புறம் சார்ந்தும் விளங்குகின்றன. அப்பதினெட்டு நூல்களின் பெயர்களை

"நாலடி நான்மணி நானாற் பதைந்திணைமுப்

பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்

இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே

கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு"

என்ற வாய்மொழிப் பாடல் வழியாக அறியமுடிகிறது. கீழ்க்கணக்கு நூல்களைத் தொடர்ந்து நல்வழி, கொன்றை வேந்தன், நீதிநெறி விளக்கம், நறுந்தொகை, உலகநீதி, ஆத்திசூடி, அறநெறிச்சாரம், நீதிநூல், மூதுரை ஆகிய நூல்கள் அறம் சார்ந்த கருத்துகளைப் பாடுபொருளாகக் கொண்டு மக்களுக்கு அறத்தையும், அறம் தவறுவதால் ஏற்படும் விளைவுகளையும் வலியுறுத்தின (Iramasubiramaniyam, 2009).

## கல்வி

கல்வி என்ற சொல்லானது 'ஆய்வு செய்' என்ற பொருளைத் தரும் 'கல்' எனும் வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியது. கல்வியை 'விஞ்சை', 'விந்தை', 'ஊதியம்', 'சாலம்', 'ஒதி', 'கலை', 'உறுதி', 'கேள்வி' போன்ற சொற்களைக் கொண்டும் வழங்குவர் (Pavaananthampillai, 1925). புறத்தில் காணப்படும் செய்திகளையோ தகவல்களையோ ஐம்பொறிகளின் வாயிலாக ஒருவனுக்கு அறிய உதவும் கருவியே, கல்வி எனப்படும்.

தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு முழுமையாகக் கிடைத்த முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் ஆசிரியர்,

"கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்

சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

என்ற நூற்பா வாயிலாக ஒருவனைப் பெருமை கொள்ள வைக்கும் நான்கு பொருள்களைக் கூறி, அவற்றுள் கல்விக்கே முதல் இடத்தைக் கொடுத்துச் சிறப்பித்துள்ளார் (Thirunganasambantham, 2018).

## கல்வியின் சிறப்பு

கல்வியின் சிறப்பை அறிந்த தெய்வப்புலவர் தான் இயற்றிய திருக்குறளில் 40 ஆம் அதிகாரத்திற்குக் 'கல்வி' என்னும் பெயரையே சூட்டியுள்ளார். அவ்வதிகாரத்தில், கல்வி என்பது பெறுவதோ கொடுப்பதோ அல்ல! அது ஒருவனிடத்தில் மாறாத (நிலைபெற்ற) குணம் எனக் கூறுகிறார்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்

நீங்கா நிலனாள் பவர்க்கு"

கல்வியைக் கற்பதற்குப் பல இன்னல்களை எதிர்கொள்ள நேரிடும். அவ்வாறு கற்ற கல்வியானது அவனுக்கு ஏழுபிறப்பிலும் உண்டாகும் துன்பத்தை நீக்கி இன்பம் கொடுக்க வல்லது என்பதை வள்ளுவர் விளக்குகிறார் (Iramasubiramaniyam, 2009).

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப் புடைத்து."

கல்வியைத் துணையாகக் கொண்டவன் தனது வாழ்க்கைக்கு வேண்டிய செல்வங்களை எளிதில் பெற்று இன்பமாக வாழ்வான் (Iramasubiramaniyam, 2009). உலகிலுள்ள அனைத்து செல்வங்களும் கற்றவனைத் தேடி வரும். இதனை அறிந்த தெய்வப்புலவர், பிற செல்வங்களை ஈட்டித் தரும் கல்வியை உயர்ந்த செல்வமாகத் தனது ஈரடி வெண்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு

மாடல்ல மற்றை யவை."

ஒருவனது வருணம், குலம், சாதி, மதம், பிறப்பு போன்ற அடிப்படையில் கல்வி கற்றுக்கொடுக்கப்பட்டதைத் தொல்காப்பிய மரபியல் தெளிவாகக் கூறுகிறது (Iramasubiramaniyam, 2009). இக்கருத்தை இயம்புவதால் மரபியலின் சில பகுதியானது, பின்னாட்களில் சேர்க்கப்பட்ட இடைச்செருகல் என்ற வாதத்தையும் சிலர் முன்வைக்கின்றனர். வேளாண் வேதமான நாலடியார், பிறப்பின் அடிப்படையில் குலத்தைப் பிரித்து கல்வி போதிக்கும் முறையை சாடியுள்ளது. மேலும், "கல்வி கற்கும் சமூகமே சிறந்த குலம்" என்னும் உயரிய சிந்தனையை,

"நல்ல குலமென்றும், தீய குலமென்றும்,

சொல்லளவு அல்லாற் பொருளில்லை - தொல்சிறப்பின்

ஒண்பொருள் ஒன்றோ? தவம், கல்வி, ஆள்வினை,

என்றிவற்றான் ஆகும், குலம்."

என்ற பாடல் வாயிலாக எடுத்தியம்பி சமண முனிவர்கள் கல்வியைச் சிறப்பித்துள்ளனர் (Iramasubiramaniyam, 2009). பிற்காலத்தில் தோன்றிய அற நூற்களுள் ஒன்றான நறுந்தொகை ஆசிரியரின்,

"எக்குடுப் பிறப்பினும் யாவரே யாயினும்

அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்"

என்ற பாடல் அடிகளும் நாலடியார் கூறிய உயரிய சிந்தனைக்கு உறுதுணை புரிகிறது (Sellathurai Muralitharan, 2001).

மனித வாழ்க்கை என்பது நாணயத்தின் இருபக்கம் போன்றது. ஒரு பக்கம் இன்பத்தையும், பிறிதொரு பக்கம் துன்பத்தையும் எதிர்கொள்ள நேரிடும். இன்பத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் மக்கள் துன்ப நேரங்களில் துணை நிற்பதில்லை. "கற்றலின் வாய்த்த பிற இல்லை" எனத் துன்ப காலத்தில் ஒருவனை உறவுகள் கைவிட்டாலும் அவன் கற்ற கல்வியானது இறுதி மூச்சு வரைத் துணை நிற்கும் என உரைக்கிறார் (Iramasubiramaniyam, 2009).

இன்றைய காலத்தில் கல்வி கற்க இயலாதவர்களுக்குக் கல்விக்கடன், ஊக்கத்தொகை, உதவித்தொகை ஆகியவற்றைக் கொண்டு அரசு உதவுகிறது. அக்காலத்தில் கல்வி கற்க விருப்பமிருந்தும் வறுமையில் வாடிய மக்கள் பிறரிடம் பணத்தைப் பிச்சையாகப் பெற்று கல்வியைக் கற்க விரும்பினர். இதனை வலியுறுத்தி ஆசிரியர் தனது நூலின் முதல் பாடலின் முதல் அடியிலேயே, "பிச்சை புக்குஆயினும் கற்றல் மிக இனிதே" எனப் பிறரிடம் பிச்சை பெற்றாவது கல்வியைக் கற்றிட வேண்டும் என்கிறார் (Iramasubiramaniyam, 2009). பிற்கால நெறி நூலான நறுந்தொகை நூலாசிரியரும் தனது நூலில்,

"கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்ற பாடல் வாயிலாகப் பிச்சை எடுத்தாவது கல்வியைக் கற்பது சிறந்தது என்கிறார் (Sellathurai Muralitharan, 2001).

ஒருவன் வாழ்க்கைக்குத் தேவையான அறத்தையும், அவனுக்குத் தேவையான பொருளையும், கிடைத்த பொருளால் அவன் பெறும் இன்பத்தையும் கல்வியும் பிறவும் கொடுக்கும். எனவே, அவற்றை உயிரினும் மேலாகக் கருதிப் பாதுகாக்கவில்லையானால் முப்பாலும் கெட்டுவிடும் என்பதனை,

"தக்கிணை வேள்வி தவங்கல்வி இந்நான்கும்

முப்பா லொழுக்கினால் காத்துய்க்க! உய்யாக்கால்

எப்பாலும் ஆகா கெடும்."

எனக் கல்வியின் சிறப்பைத் தனது பாடல்கள் வாயிலாகச் சிறப்பித்துக் கூறுகிறார் (Iramasubiramaniyam, 2009).

கல்வியை முறையாகக் கற்றுத் தேர்ந்தவன், தனது நாட்டை விட்டகன்று வேறு நாட்டுக்குச் சென்றாலும், அவனது அறிவுத்திறனைக் கண்டு யாவரும் சிறப்புச் செய்து உணவளிப்பதால் சொந்த நாட்டிலிருப்பதாகவே எண்ணுவான் என்பதை,

"ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்

நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அந்நாடு

வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினால்

ஆற்றுணா வேண்டுவ தில்."

என்ற பாவரிகளால் கல்வியைக் கற்றவன் அடையும் சிறப்பைக் கூறுகிறார் (Iramasubiramaniyam, 2009).

## கல்வி பெறும் முறை

"நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என போற்றுதலுக்குறிய நூல்களுள் ஒன்றான நாலடியார், சிறந்த ஒழுக்கத்தால் பெற்ற கல்வியைத் தவிர வேறு எதுவும் அழகில்லை என எடுத்தியம்பிகிறது.

"குஞ்சி அழகும், கொடுந்தானைக் கோட்டழகும்,

மஞ்சள் அழகும், அழகல்ல, நெஞ்சத்து,

'நல்லம்யாம்' என்னும் நடுவு நிலைமையால்,

கல்வி அழகே அழகு"

விளம்பிநாகனார் தான் இயற்றிய நூலான நான்மணிக்கடிகையில் கல்வியின் திறவிகோளே ஒழுக்கம் என்கிறார். இதனை, "ஆசாரம் என்பது கல்வி" எனக் கல்விக்கும் ஒழுக்கத்துக்கும் இடையையான இன்றியமையாதத் தொடர்பை எடுத்தியம்புகிறார் (Iramasubiramaniyam, 2009).

கல்வியைப் பெறுவதற்குச் சிறந்த பள்ளிகளையும் கல்லூரிகளையும் தேடி ஓடிக்கொண்டிருக்கும் பெற்றோர்கள் தங்களது குழந்தைகள் ஒழுக்கத்தில் சிறந்தவர்களா? என்பதை அறியத் தவறுகின்றனர். கோடி கோடியாய் செலவு செய்தாலும் ஒழுக்கமற்ற மாணவ மாணவிகளிடத்தில் கல்வியும் பிறவும் நிலைபெறாது என்பதனை,

"பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு

நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை

இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப, என்றும்

ஒழுக்கம் பிழையா தவர்" (Iramasubiramaniyam, 2009)

இப்பாடல் கூறும் கருத்தையே 1819-1900 காலக்கட்டத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளரான ஜான் ரஸ்கின், "கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதன்று ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதே" என நவின்றார் (Kalaimani, 2019).

கல்வியின் சிறப்பையும் அதனால் உண்டாகும் நன்மைகளையும் உணர்ந்த ஆசிரியர் தனது பெயரிலேயே (கணிமேதாவியார் = கணிதம்+மேதை+ஆவியார்) கல்வியைக் கொண்டுள்ளார். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருத்துவ நூலான ஏலாதியில் மருத்துவத்திற்கு மாறாக கல்விக்கே முதலுரிமை கொடுத்த இவர், தனது நூலின் முதல் பாடலிலேயே,

"சென்றபுகழ், செல்வம், மீக்கூற்றம், சேவகம்

நின்ற நிலைகல்வி, வள்ளன்மை - என்றும்

வழிவந்தார் பூங்கோதாய் ஆறு மறையின்

வழிவந்தார் கண்ணே வனப்பு"

கல்வியைப் பெற்று சிறந்த ஒழுக்கமுடையவராக விளங்குபவர்கள் மறை வழி வந்தவர்கள் எனக் குறிப்பிடுகிறார் (Iramasubiramaniyam, 2009).

## கல்வி கற்கும் முறை

ஒரு நூலைப் படித்து முடிப்பதற்குள் ஒருநூறு நூல்கள் வெளியாகும் அறிவியல் வளர்ச்சி பெற்ற இக்காலத்திற்கு ஏற்றவாறு சமண முனிவர்கள் அன்றே தங்களது கருத்தைப் பதிவிட்டுள்ளனர். கல்வி கற்க கற்பவரின் ஆயுட்காலம் போதாது. எனவே, சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்று அதன்வழி நடந்து கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளனர்.

"கல்வி கரையில கற்பவர் நாள்சில

மெல்ல நினைக்கின், பிணிபல-தெள்ளிதின்

ஆராய்ந் தமைவுடைய கற்பவே, நீர்ஒழிய

பாலுண் குருகிற் றெரிந்து." (Iramasubiramaniyam, 2009)

இளமைப் பருவத்திலேயே கல்வியைக் கற்றுக் கொள்ளுமாறு தமிழ் மகளான ஔவையார் "இளமையில் கல்" என அன்புக் கட்டளையிடுகிறார் (Karthikesu Swamikal, 1996). பழமொழி நூலாசிரியரும் தனது நூலின் முதல் பாடலிலேயே,

"ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்

போற்றும் எனவும் புணருமோ"

எனக் கல்வியைக் கற்பதற்குரிய வயதில் கல்லாதவன், முதிய வயதில் கல்வியைக் கற்று வல்லவனாக மாட்டான் என்கிறார். நல்லாதனாரும் தனது நூலில், "முந்தை எழுத்தின் வரவுணர்ந்து" என்ற அடியின் வாயிலாக இளமையில் கற்கும் கல்வியானது சிறப்பைக் கொடுக்க வல்லது என்கிறார் (Iramasubiramaniyam, 2009).

## கல்வியை வெளிப்படுத்தும் முறை

ஒழுக்கத்தைத் துணையாகக் கொண்டு இளமை வயதில் கல்வியைப் பெற்றுக் கற்றவன் எனப் பலராலும் போற்றப்படுபவன், சான்றோர் குழுமிய அவையில் தனது கருத்தைக் கலக்கமற்ற குரலோடு பிறருக்குத் தெளிவான முறையில் விளங்கும் வகையில் கூற வேண்டும். இதனைக் "கற்றான் அதிர்ப்பின், பொருள் அதிர்க்கும்." என்ற அடியில் கற்றவனது அறிவில் கலக்கம் ஏற்பட்டால், அவன் கற்ற கல்வியிலும் கலக்கம் ஏற்பட்டுவிடும் என்கிறார் (Iramasubiramaniyam, 2009). இக்கருத்தையே தமிழ் மகளான ஔவையும் தனது நூலில், "நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை" எனக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார் (Karthikesu Swamikal, 1996).

இக்காலத்து மக்கள் கல்வியை மதிப்பெண்ணோடு ஒப்பிட்டுக் கல்வியின் உண்மைப் பொருளையே மாற்றிவிட்டனர். கல்வி கற்றவன் தான் பெற்ற பட்டங்களை மட்டும் சுமக்காது பிறர் கேட்கும் கேள்விகளுக்கு அஞ்சாது பதில் அளிப்பவனாக இருத்தல் வேண்டும் என்பதை, "கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே." எனப் பூதஞ்சேந்தனார் வலியுறுத்துகிறார் (Iramasubiramaniyam, 2009).

பிறர் கேட்கும் கேள்விகளுக்கு அஞ்சாது பதில் அளிப்பவனாக இருத்தல் வேண்டும் என்று கூறிய ஆசிரியர், யார் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூற வேண்டும் என்பதையும் பின்வருமாறு கூறியுள்ளார். "கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே." என்ற பாடலில் அறிவுடையாரின் ஐயத்தைத் தீர்ப்பதே கற்றவர்க்குச் சிறப்பு எனக் கல்வியையும், கற்ற மாந்தர்களையும் சிறப்பித்துள்ளார். இனியவை நாற்பது (பாடல். 12, 16) கூறிய கருத்துகளைச் சுருங்கக் கூறி விளங்க வைப்பதற்குச் சொந்தக்காரரான திருவள்ளுவர்,

"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்

சொல்தெரிதல் வல்லார் அகத்து."

எனக் கற்றவர் நிறைந்த அவையில் அஞ்சாது பதில் கூறுபவனிடமே கற்றவரின் கல்வியின் பெருமை சிறந்து விளங்கும் என நவின்றுள்ளார் (Iramasubiramaniyam, 2009). கற்க வேண்டிய நல்ல நூல்களைக் கற்று அவற்றுள் கூறப்பட்டுள்ள கருத்துகளை மனத்தில் உள்வாங்குவதோடு மட்டுமல்லாது வாழ்க்கையிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை,

"கறக கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக."

என்ற குறள் வாயிலாக உலக மக்கள் தாங்கள் கற்ற கல்வியின்படி நிற்க வேண்டும் என வலியுறுத்துகிறார் (Iramasubiramaniyam, 2009). இக்கருத்தையே பிற்காலத்தில் எழுந்த நெறி நூலான நறுந்தொகை நூலின் ஆசிரியரான அதிவீரராம பாண்டியரும் "கல்விக் கழகு கசடற மொழிதல்" (Sellathurai Muralitharan, 2001) மொழிந்துள்ளார். பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தும் கற்ற மாந்தர்கள் நிறைந்த அவையில் தனது கருத்தை முன் வைக்க அஞ்சுபவரை,

"கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்

நல்லா ரவையஞ்சு வார்."

என்ற குறளால் கல்லாதவரைக் காட்டிலும் இழிந்தவராகக் கூறுகிறார் (Iramasubiramaniyam, 2009). இக்கருத்தையே எடுத்தியம்பும் பாடலைக் குமரகுருபர் தனது நூலில்,

"அவை அஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும்

பூத்தலின் பூவாமை நன்று."

என அவைக்கு அஞ்சுபவர் கல்வியை கற்காமல் இருப்பதே சிறந்தது என்கிறார் (Sellathurai Muralitharan, 2001). சுருங்கக் கூறி விளங்க வைத்தலுக்கு சொந்தக்காரரான வள்ளுவர், கற்றவன் அடையும் சிறப்புகளைத் தனது தமிழ்மறையில்,

"யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்

சாந்துணையுங் கல்லாத வாறு."

என்னும் குறட்பா வாயிலாக்க் கல்வி கற்றவனுக்கு எல்லா நாடுகளுமே சொந்த நாடாகும் என்ற உயர்ந்த கருத்தை எடுத்தியம்புகிறார் (Iramasubiramaniyam, 2009).

## கல்லாதவனின் நிலை

அறிவை அகண்டமாக்கும் நூல்களைக் கற்று நடைமுறைப்படுத்தவே இறைவன் மனிதனுக்கு இரு கண்களைப் படைத்தான். தெய்வப்புலவர் தனது நூலில்,

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லா தவர்."

எனக் கல்லாதவரின் முகத்தில் இருக்கும் கண்களைப் புண்களோடு ஒப்பிட்டுக் கூறுகிறார் (Iramasubiramaniyam, 2009). கல்வியானது பொருள் ஈட்ட வல்லது என்ற வள்ளுவரின் கூற்றுக்கிணங்க நூலை முறையாகக் கற்றுத் தேர்ச்சி பெறாதவர் வறுமை நோயால் பீடிக்கப்படுவர் என்பதை,

"வாய்நன் கமையாக் குளனும் வயிறாரத்

தாய்முலை யுண்ணாக் குழவியுஞ் - சேய்மரபிற்

கல்விமாண் பில்லாத மாந்தரு மிம்மூவர்

நல்குரவு சேரப்பட் டார்."

என்ற பாடலில் மருத்துவ நூலாதலால் வறுமையை நோயோடு ஒப்பிட்டு நல்லாதனார் பாடியுள்ளார் (Iramasubiramaniyam, 2009).

இன்றைய நவீன உலகம் பல வேறுபாடுடைய துறைகளால் இயங்கிவருகிறது. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மருத்துவம், மேலாண்மை, அறிவியல், கணிதம், பொருளாதாரம், வணிகம் எனப் பல துறைகளின் செயல்பாடுகள் உதவுகின்றன. இத்துறைகளைச் சார்ந்த ஒவ்வொருவரும் தங்களது துறையே சிறந்தது என்றும் ஏனைய துறைகளைப் பயனற்றதாகவும் கருதுகின்றனர். இதனை,

"கல்வி

செவிக்குற்றம் பார்த்திருப் பானுமிம் முவர்

உமிக்குற்றிக் கைவருந்து வார்."

என்ற பாடலில் தான் கற்றுத் தேறாத கல்வியை ஆராயாது குறை கூறுபவன் உமியைக் குத்துபவருக்கு ஒப்பாவார் என்கிறார். பிற துறைக் கல்வியை ஆராயாது குறை கூறுபவர், தனக்கு உணவாகப் பயன்படாத உமியைக் குத்துபவருக்கு ஒப்பாகக் கூறுகிறார் (Iramasubiramaniyam, 2009).

கற்ற மாந்தரிடம் உரையாடும்போது பல நூல்களில் கூறப்பட்டுள்ள செய்திகளைக் கேட்டுப் பயன் பெறமுடியும். கல்லாதவரின் பேச்சைக் கேட்பதால் இபயன்படக்கூடிய நேரமே வீணாகும் என்பதைக்,

"கற்றறி வில்லான் கதழ்ந்துரையும் - பற்றிய

எண்ணிற் றெரியாப் பொருள்."

எனக் கல்வியறிவு இல்லாதவனின் பேச்சை இகழ்ந்துப் பாடியுள்ளார் (Iramasubiramaniyam, 2009).

பரந்து விரிந்த பூமியில் காணப்படும் உயிரினங்களும் ஏனைய உயிரற்ற பொருள்களும் மனிதனது வாழ்வில் இன்றியமையாததாக விளங்குகின்றன. கல்வியைப் பெற்ற மனிதனோ இறப்பிற்கு முன்னே தனது முத்திரையை அடையாளமாக விட்டுச் செல்கின்றான். இத்தகைய அடையாளமே பிற்காலத்தில் வரலாறாகப் பேசப்படுகிறது. கற்றவனே பல சாதனைகள் புரிந்து அவனது இறப்பிற்குப் பின்பும் மக்களால் புகழப்படுகிறான். இத்தகைய சிறப்பை ஏற்படுத்தும் கல்வியைக் கற்காத மாந்தர்களின் பிறப்பைப் பின்வருமாறு இகழ்ந்துள்ளார்.

"மெழுத்தினை

ஒன்றும் முணராத வேழையும்

பிறந்தும் பிறவா தவர்." (Iramasubiramaniyam, 2009)

இக்கருத்தை கி.மு.484 - கி.மு.406க்கு இடையேயான காலக்கட்டத்தில் வாழ்ந்த கிரேக்க நாடக ஆசிரியான யுரிப்பிடீஸ், "கல்வியைப் புறக்கணித்தவன் இறந்த காலத்தை இழந்தவன் எதிர்காலத்தை மறந்தவன்" என்கிறார் (Kalaimani, 2019). ஆங்கில எழுத்தாளரும் அரசியல்வாதியுமான அடிஸன், "கல்வி இல்லாத ஆன்மா பணி செய்யாத சலவைக் கல்" எனக் கல்லாதவனை சலவைக் கல்லோடு ஒப்பிடுகிறார் (Kalaimani, 2019).

கல்வி அறிவில்லாதவர் கற்றவரின் அவையில் தோன்றி அவர்களை இகழ்ந்து கூறுதல், அறுசுவை உணவு மத்தியில் மிளகைத் தேடி உண்டவர்க்கு ஒப்பாவார் என மூன்றுரையரையனார் தனது நூலான பழமொழியில் ஒரே பொருளுடைய பாடலை இரண்டு முறைப் பாடிச் சிறப்பித்துள்ளார்.

"அல்லவையுள் தோன்றி அலவலைத்து வாழ்பவர்

நல்லவையுள் புக்கிருந்து நாவடங்கக் - கல்வி

அளவிறந்து மிக்கார் அறிவெள்ளக் கூறல்

மிளகுளு வுண்பான் புகல்" (Iramasubiramaniyam, 2009).

## முடிவுரை

சங்க காலத்தில் வாழ்ந்த அரசர்கள் கற்ற மாந்தர்களையே துணையாகக் கொண்டு நாட்டை ஆட்சி செய்தனர். கல்வியறிவு இல்லாத ஒருவன் செல்வங்களை மிகுதியாகக் பெற்றிருந்தாலும் அவனை இழிவாகவே கருதினர். கல்வியின் சிறப்பை அறிந்த நீதிநூல் ஆசிரியர்கள் தங்களது நூல்களில் அறத்தைக் கூறுவதோடு நில்லாது கல்வியைக் குறித்தும் பல பாடல்களில் போற்றிப் புகழ்ந்துள்ளனர். மேலும், நம் முன்னோர்கள் கூறிய கூற்றுகள் பலவற்றை மேலை நாட்டறிஞர்கள் கூறியிருப்பதும், மேலை நாட்டறிஞர்களின் கூற்றுகள் பல நீதிநூல்களில் இடம்பெற்றிருப்பதும் வியக்கத்தக்கதாக அமைகிறது.

## References

Iramasubiramaniyam, M.A. (2009) Pathinen Keezhkanakku Volume 1, 2 & 3, Chellappa Publishing House, Madurai, India.

Kalaimani, N.V. (2019) Ulaga Aringarkalin Nammai Membaduthum Ennangkal, Tamil E books, India.

Karthikesu Swamikal. (1996) Avvaiyin Manuthathuvam, Aruloli Nilaiyam, Colombo, Sri Lanka.

Pavaananthampillai, S. (1925) Tharkaala Tamizh Sollagarathi, Macmillan & Company, Chennai, India.

Sellathurai Muralitharan. (2001) Neethi Noolkal Yezhu, Ashtalakshmi Publishing House, Colombo, Sri Lanka.

Thirunganasambantham, S. (2018) Tholkappiyam Porulathikaaram Moolamum Uraiyum, Kathir Publishing House, Thiruvaiyaru, India.

## Funding

This study was not funded by any grant

## Conflict of interest

The Authors have no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Authors 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

Mohamed Azrin, S., Selvaraju, T. Educational Ideas in Moral Tamil Literature, Indian Journal of Tamil, 3(4) (2022) 23-30. https://doi.org/10.54392/ijot2243